Registered as a Newspaper

ஸ்ருடியோ
வீ ன ஸ்
சிறந்த விடியோ
படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூ. 1/-

ஸ்ருடியோ
வீ ன ஸ்
சிறந்த கலர்,
கறுப்பு - வெள்ளை
படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 9 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 22 (25-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-316

## இரவுவரை

# இந்தியக் குழு ஜனதிபதியுடன் அவசரப் பேச்சு

### பயனுள்ளதாக இருந்தது என இந்திய வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, நவம்பர். 25

நேற்றுத் திடீரெனக் கொழும்பு வந்த இரு மத்திய அமைச்சர்களைக் கொண்ட இந்தியத் தூதுக்குழு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் அவசரப் பேச்சுக்களை மேற்கொண்டது.

மாலை சுமார் 5. 30 மணிக்கு ஆரம்பித்த பேச்சுகள் இரவு ஒன்பதரை மணிக்கு முடிவுற்றன.

பேச்சுக்கள் முடிந்ததும் இந்திய அமைச்சர்கள் உடன் தாயகம் பயணமானர்கள்.

பெங்களூர் பேச்சுகளின் போது முன்வைக்கப்பட்ட புதிய யோசனைகளின் உருவகங்களின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடந்ததாக அறியப்படுகிறது.

நேற்றைய பேச்சுவார்த்தை மிகவும் விரிந்த அடிப்படையிலும் பயனுள்ள வகையிலும் அமைந்ததாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் அவை மேற்கொண்டு விவரம் தர மறுத்து விட்டன.

இலங்கையின் இந்த வாரத்து இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஏதாவது பேசப்பட்டதா என்று உதயன் சிறப்புச் செய்தியாளர் கேட்ட போது அதற்கும் பதில் அளிக்கப்படவில்லை

இந்த அவசரப் பேச்சுகளுக்குப், ரஷ்யத் தலைவரின் இந்திய விஜயத்துக்கும், இஸ்ரவேல் ஜனதிபதியின் கொழும்பு விஜயத்துக்கும் சம்பந்

(4ஆம் பக்கம் பார்க்க)


### சுபநேரம்

25—11—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.42 முதல் 12.12 வரை
ராகுகாலம்:
3.12 முதல் 4.42 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமிகாலை 6.46 வரை

### மயிலிட்டியில் உண்ணுவிரதம்

யாழ்ப்பாணம், நவ. 25

விஜிதரன் காணமல் போனது தொடர்பாக நடைபெறும் சாகும் வரை உண்ணுவிரத போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மயிலிட்டி தெற்கு பயிந்தாவத்தை கிராம மக்கள் நேற்று ஒருநாள் அடையாள உண்ணுவிரதம் இருந்தனர். (இ-5)



புலிகளினுல் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களையும் அவர்கள் மத்தியில் புலிகள் தளபதி கிட்டு உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (உ)

# மரணத்தின் மத்தியில்

## மக்களுக்காகப் போராடுகிறேம்

### கையில் கட்டுடன் கிட்டு உரை

யாழ்ப்பாணம், நவ 25

இதுவரை 372 விடுதலைப் புலிகள் பலியான போதும்- மரணம் எம் தலைமேல் தூங்க - மனம் விடுதலைக்காய் ஏங்க- கழுத்தில் சயனைட் குப்பியுடன் நாம் மரணத்தின் மத்தியில் மக்களுக்காகப் போராடுகின்றேம்.

இவ்வாறு நேற்றுநடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் புலிகள்இயக்கத்தின் யாழ். பிராந்திய தளபதி கிட்டு கூறினர்.

அச்சுவேலிச் சமரில் ஏற்பட்ட காயத்தால் கையில் கட்டுடன் கிட்டு உரையாற்றினுர்.

அவர் மேலும் பேசுகையில்; சில தீய, மக்கள் விரோதச் சக்திகள் எமக்கெதிராக பிரசாரம் செய்து வருகின்றன இதனுல் மக்கள் எம்மை மறந்து விட்டனரோ? எம் தியாகம் வீண்போய் விட்டதோ? என்று நான் பயந்தேன்.

ஆனல் இன்றைய பேரணியைப் பார்த்து

(4ஆம் பக்கம் பார்க்க)

### கோப்பாயில் மறியற் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 25

விஜிதரன் விவகாரம் தொடர்பாக சாகும் வரை உண்ணுவிரதம் இருக்கும் மாணவர்களுக்குஆதரவாக கோப்பாய் சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் நேற்று மறியல் போராட்டம் நடத்தினர். (இ-5)

முச்சந்தி முனி



உந்தப் பேச்சு எண்ட விஷயத்தைக் கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப் போச்சு தப்பா அதை விட்டுத்தள்ளு....!

# போராளிகள் அஹிம்சை வழியை நாடுவது சரித்திரத்தில் புதியதல்ல

### உண்ணுவிரதத்தை முடித்து பிரபா உரை

சென்னை, நவ. 25

ஆயுதம் தாங்கிய போராளிகள் அஹிம்சை வழிப் போராட்டத்தை நாடியது சரித்திரத்தில் ஒன்றும் புதிதல்ல.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜியும் வேறும் பலரும் இந்த வழியைப் பின் பற்றியிருக்கின்றனர். ஐரிஷ் புரட்சி வீரர் பொபி சாண்ட்ஸும் இந்த சிறையில் உண்ணுவிரதம் மேற்கொண்டார்.

தமிழகத்தில் தமது உண்ணுவிரதப் போராட்டத்தைக் கைவிட்ட பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. உறுப்பினா 7 பேர் பதவிஇழப்பு

### அரசியல் சாசனத்தை எரித்ததால்

சென்னை, நவ. 24

இந்திய அரசியல் சாசனத்தை எரித்தமைக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏழு சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவிகளை இழந்து விட்டனர் என்று தமிழ் நாடு சட்ட சபை சபாநாயகர் பி எச். பாண்டியன் தீர்ப்பளித்தார்.

பதவி ஏற்பின் போது கொடுத்த உறுதி மொழியை இந்த ஏழு உறுப்பினர்களும் மீறி விட்டனர் என்றும் சபாநாயகர் தீர்ப்பளித்தார்.

பதவி இழந்த சட்ட உறுப்பினர்கள் வருமாறு: 1. கே. அன்பழகன் 2. எஸ். பாலன் 3. இரா. செல்வராஜ் 4. பரிதி இளம் வழுதி 5. எஸ். பொன்னுரங்கம் 6. எம். இராமநாதன்

(4ஆம் பக்கம் பார்க்க)

### 144 மணிநேர உண்ணுவிரதம்

# மாணவி நிலை கவலைக்கிடம்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ் பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணுவிரதப்போரில் குதித்திருக்கும் ஆறுபேரில் ஒரு மாணவியின் நிலை நேற்று மாலைதொடக்கம் கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து 144மணி நேரம் (ஆறுநாட்கள்) உண்ணுவிரதமிருந்து வரும் இந்த ஆறுபேரில் மட்டக்களப்பைச்சேர்ந்த கோகிலேஸ்வரி என்ற மாணவியின் உடல் நிலையே நேற்று மிகவும் பாதிப்படைந்து கவலைக்கிடமானது

நேற்றுப்பிற்பகல் இவர் மயக்கமுற்றுர். அதன்பின்னர் அவருக்கு அவசர வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றிரவு பத்து மணியளவில் எமது செய்தியாளர் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பார்வையிட்டபோது உடல்நிலை மோசமுற்றிருக்கும் கோகிலேஸ்வரி கட்டிலில் மயங்கிய நிலையில் காணப்பட்டார்.

மற்றைய ஐந்து உண்ணுவிரதிகளும் சோர்ந்து களைப்புற்ற நிலையில் கட்டிலில் படுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ● பிந்திய செய்தி

### மாணவி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ. 25

உண்ணுவிரதமிருந்து மயக்கமுற்ற மாணவி கோகிலேஸ்வரி நேற்று நள்ளிரவு தனியார் ஆஸ்பத்திரி ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி மாணவி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது குறித்தோ அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட அவசர சிகிச்சைகள் குறித்தோ தகவல் தெரிவிக்க குறிப்பிட்ட தனியார் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மறுத்து விட்டன. (உ)

### வழமைக்குத் திரும்பிய யாழ் நகர்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம் நேற்று ஓரளவு வழமைக்குத் திரும்பியது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக வெறிச்சோடிக்கிடந்த நகரப்பகுதிகளில் நடமாட்டம் நேற்று வழமைக்குத் திரும்பியது.

பஸ் நிலையத்தில் இருந்து மீண்டும் வாகனங்கள் போக்குவரத்துச் சேவைகளை நடத்தின.

கடைகளும் ஓரளவுக்கு திறக்கப்பட்டன.

மக்கள் தமது அன்றுட அலுவல்களை கவனிப்பதில் வெகு அவசரமாக ஈடுபட்டிருந்தனர். (உ-10

### பல்கலைக்கழகத்தில்

# உண்ணுவிரதிகளுடன் கிட்டு நேற்றுச் சந்திப்பு

### சுமுகத் தீர்வு காண மதகுருமார் முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 25

விஜிதரன் விடயம் தொடர்பாக சாகும் வரை உண்ணுவிரதம் இருக்கும் மாணவர்களை புலிகளின் யாழ்மாவட்ட தளபதி கிட்டு சென்று சந்தித்து உரையாடினுர்:

அருட்திரு. எஸ். ஜெயசீலன் அடிகள் அருட்திரு கே. பி. கோவிந்தராஜ் மற்றும்பல கிறீஸ்தவ மதகுருமார்கள் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு கிட்டுவை அழைத்துச் சென்றிருந்தனர்.

உண்ணுவிரதப் போராட்டத்திற்கு தாம் ஆதரவளிப்பதாக கிட்டு உண்ணுவிரதிகளுக்குச் சொன்னுர்.

உண்ணுவிரதப் போராட்டத்தால் விஜிதரன் விடுதலையாவது தடைப்படும். கடத்தியவர்கள் கௌரவப் பிரச்சினையால் விஜியை வெளி நாட்டில் எங்கேயாவது விடுதலை செய்யலாம் என்றுர் கிட்டு

மகாஜனு, பலாலிவீதி மறிப்புப் போராட்டங்களில் மாணவரை எதிர்த்த விடுதலைப் புலிகளைத்தாம் தண்டிப்பதா

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் நகரில் நடந்த இரு பெரும்பேரணிகள்

—அலுவலகச் செய்தியாளர்கள்—

யாழ்ப்பாணம், நவ. 25

தமிழீழ விடுதலைப் புலிகளும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று யாழ் நகரில் தனித்தனியாக ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர்.

புலிகளின் பேரணி சுமார் ஒரு மைல் தூரம் நீண்டதாகக் காணப்பட்டது.

* தமிழீழ விடுதலைப் போராளிகள் மீது இந்திய அரசு அரைகுறை தீர்வுகளை நிர்ப்பந்திக்கக் கூடாது.

* தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் சுதந்திரமாக தமிழீழம் செல்வதற்கு தமிழ் நாடு அரசு அனுமதி வழங்க வேண்டும்.

* பிரபாகரன் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகளை முன் வைத்தே புலிகளின்

(4ஆம் பக்கம் பார்க்க)



பல்கலைக்கழக மாணவர்களினுல் நேற்று நடத்தப்பட்ட பேரணியில் சென்ற மாணவ, மாணவியர் (உ)

# காரைநகரில்

## 4 படையினர் படுகாயம்

### புலிகள் 'கனன் சார்ஜ்'

காரைநகர் கடற்படையினர்மீது நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனுல் நான்கு கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 9 மணி அளவில் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து நூறுயார் தூரத்தில் உள்ள நேவிச்சந்தியில் பல கடற்படையினர் நின்றிருந்தனர்.

அப்பொழுது ஹெலிக்கொப்டர் ஒன்றும் காரைநகர் கடற்படை முகாமில் தரை இறங்கியது.

இதனையடுத்தே புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

காயமடைந்தவர்களை சிறிய கவச வாகனம் ஒன்றில் கடற்படையினர் ஏற்றிச் சென்றதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வங்கி அலுவலக இடமாற்றம்
வரையறுக்கப்பட்ட
ஹட்டன் தேசிய வங்கி
மேற்படி வங்கியின் அலுவல்கள் யாவும்
25 - 11 - 1986 செவ்வாய்க்கிழமை முதல்
பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு
ஸ்ரான்லி வீதி, இல. 54 இல் அமைந்துள்ள
(ஆரியகுளம் சந்தியிலிருந்து சுமார் 150 யார் தொலைவில், ஸ்ரீதர் சினிமாவுக்கு அண்மையில்)
தற்காலிக அலுவலகத்தில் நடைபெறும்.
ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தற்போதைய அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
வாடிக்கையாளர் அனைவரும்
புதிய அலுவலகத்திற்கு வருமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.
தற்காலிக தொலைபேசி இல. 23175

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### சிற்றுண்டிச்சாலை

பருத்தித்துறை, நவ 25

புலோலி ப. நோ. கூ. சங்கம் மந்திகையில் சிற்றுண்டிச்சாலை ஒன்றைத் திறக்கவுள்ளது இக்கிளையை அமைப்பதற்கான அனுமதியை யாழ் மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் வழங்கியுள்ளார் எனபுலோலி ப. நோ கூ. சங்கத் தலைவர் திரு. சு. நடராசா தெரிவித்தார். (இ-118)

### தாவடியில் பற்சிகிச்சை

பலாலி. நவ. 25

தாவடி ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 10ஆம் திகதியில் இருந்து 20ஆம் திகதிவரை 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பல் சிகிச்சையை இலவசமாகமேற்கொண்டது

பற்பரிசோதனையையும், பற் சிகிச்சையையும் வைத்திய கலாநிதி பீ. பாலசுப்பிரமணியம் நடத்தினார். (இ-119)

### தென்னை உரம்

யாழ்ப்பாணம். நவ 25

தென்னை உரத்தை நல்லூர் சமநலசேவை நிலையத்தில் பணியாற்றும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

தென்னை உரம், மரம் ஒன்றுக்கு 2.5 கிலோ கிரும் வீதம் இடப்பட வேண்டும் மரத்தின் அடியில் இருந்து ஆறு அடி தூரத்தில் பசளையைப்போட்டு கொத்தி விடவேண்டும் - இப்படித் தெரிவிக்கபடுகிறது. (இ-எ)

### மாநாடு

வேலணை நவ. 25

ஆருவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1987ஆம் ஆண்டு மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெற உள்ளது (உ-167)

### முல்லைத்தீவில் உயிரிழந்தோர்

யாழ்ப்பாணம், நவ 25

வெள்ளிக்கிழமை முல்லைத்தீவுப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் 8 பொதுமக்கள் இறந்துள்ளனர் எனவும், பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரியவருகிறது

இறந்தவர்களின்பெயர்கள் வருமாறு:-

சி. சுந்தரம்பிள்ளை (37 வயது), மணியம் (42 வயது), பொன்னம்பலம் (55 வயது) பெருமாள் ஐயாத்துரை என்பரின் மகன் (27 வயது)

அன்ரன் ஜெயரட்ணம் (வயது 27), சலாம் பிள்ளை யோகராசா (18 வயது). (இ)

# நெல்வயல்களில் இலைச்சுருட்டி நோய்

பருத்தித்துறை, நவ. 25

"பருத்தித்துறை, குடத்தனை, அம்பன், செம்பியன்பற்று ஆகிய பகுதிகளிலுள்ள நெல் வயல்களில் இலைச்சுருட்டி நோய்த்தாக்கம் ஆரம்பித்துள்ளது"

அம்பன் விவசாயப் போதனாசிரியர் திரு வ. பரமேஸ்வரன் இப்படி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விவசாயிகளுக்கு விடுத்துள்ள செய்தி:-

'இந்த இலைச்சுருட்டி நோயைக் கட்டுப்படுத்தாவிடில் எதிர்நோக்கும் விளைச்சலில் பெரும் பாதிப்பு ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்த ரமரோன் அல்லது லெபசிட் அல்லது மொனோகுரோட்டபொஸ் என்ற பூச்சிநாசினி 1 அவுன்ஸ்க்கு 3 கலன் நீர் கலந்து இயந்திர தெளி கருவி மூலம் விசிறுவதே சிறந்தது. விவசாயிகள் காலதாமதமின்றி உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் மேலும்

இதேபோன்று நெற் பயிர்களிலும் மேட்டு நிலப்பயிர்களிலும் ஏற்படக்கூடிய பூச்சிநோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றியும் பயிர்ச்செய்கையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விளக்க கருத்தரங்குகளும் பயிற்சி வகுப்புகளும் அம்பன் விவசாயப் போதனாசிரியராலும் அவ்வப்பகுதி விவசாய விரிவாக்க சேவையாளர்களாலும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளிலும், கலந்துரையாடலிலும் விவசாயிகள் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விவரங்களுக்கு அவ்வப்பகுதி விவசாய விரிவாக்கசேவை உத்தியோகத்தர்களுடனும் அம்பன் விவசாயப் போதனாசிரியருடனும் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (உ-118)

## மக்கள் முகம்

### கலைநகர் தேசியஇளைஞர் சேவைகள்மன்றம்

வட்டுக்கோட்டை, நவ. 25

சித்தன்கேணி கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் கலைநகர் நேருஜி கிராமமுன்னேற்றச்சங்கத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. கு. கோகுலநாதசன். உபதலைவர் திரு. தெ விஜேந்திரன், செயலாளர் திரு. வி. வள்ளிகாந்தன். பொருளாளர்: திரு. க. இளந்திரையன், கணக்குப் பரிசோதகர்: திரு. வ. செல்வராசா, நிர்வாகக்குழு: திரு. கே. தங்கராசா, திரு. ந. விஜயகுமார், திரு. எஸ் சுரேஸ்குமார், திரு. இரா. முத்துச்சிவராசா, திரு. மு. வி. தயாளன். (இ-161)

# சிப்பாய்களின் சடலங்களுக்கு பதிலாக கல், மண்ணு?

## இல்லை என்கிறார் அத்துலத்

கொழும்பு, நவ 25

சில பண்ணைப்பட்டு வரும் பிரேதப் பெட்டிகளுக்குள் சிப்பாய்களின் சடலங்களுக்குப் பதிலாக கல், மண் போன்ற பொருள்களே வைக்கப் படுகின்றன என்ற கூற்றில் உண்மை கிடையாது.

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா பேசுகையிலேயே உயிரிழக்கும் படையினரின் சடலங்களுக்குப் பதில் கல், மண் முதலியன தான் சவப்பெட்டிகளுக்குள் போடப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்படுகின்றன என்று குற்றஞ் சாட்டியிருந்தார அதற்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் அத்துலத்முதலி முன்கண்டவாறு கூறினார்.

சில வைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்படும் சவப் பெட்டிகளில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் தான் வைக்கப்படுகின்றன-

சடலங்களுக்குப் பதில் கல், மண் போட்டுத்தான் சவப்பெட்டிகள் கையளிக்கப்படுகின்றன என்று கூறப்படுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பாகும்.

எல்லா நாடுகளிலும் இந்த நடைமுறை தான் கடைப்பிடிக்கப்படுகின்றது.

காணமற் போகும் படையினருக்குரிய சம்பளம், அலவன்ஸ் அவர்களின் உறவினர்களுக்கு 55 வயது வரை வழங்கப்படும். சிறைப்பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு சிப்பாய்களுக்கும் சம்பளம், அலவன்ஸ் முதலியன வழங்கப்படுகின்றன.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார். (இ-எ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# தாயாரின் மரணத்துக்கு நஷ்டஈடு கோரி

## மாநகரசபைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ. 25

பழுதடைந்த மின் வயர் அறுந்து விழுந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்த பெண்ணின் மகள் நஷ்டஈடு கோரி யாழ். மாநகரசபைக்கு விண்ணப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம்,செபஸ்தியார் வீதி, 19/3 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திருமதி வி. இன்பராணி என்ற பெண் மாநகர ஆணையாளருக்கு இது சம்பந்தமாக எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

எனது வீட்டின் அருகே உள்ள ஒழுங்கை ஊடாக மறு வீதிக்கு யாழ் மாநகரசபை மின்சாரம் வழங்குகின்றது.

இந்த மின் வயர் பழுதடைந்து அறுந்து விழுந்துவிட்டதை நாம் ஆறு மாதங்களுக்கு முன்னர் மாநகரசபைக்கு அறிவித்தோம்.

சபை ஊழியர்கள் வந்து அறுந்து விழுந்த வயரை முடித்து தொடர்பு ஏற்படுத்தி விட்டு பின்னர் புதிய வயரைக் கொண்டுவந்து போடுவதாகக் கூறிச் சென்றனர்.

சென்ற 3 ஆம் திகதி மாலை எனது தாயார் முற்றத்தில் நின்று கொண்டிருந்த சமயம், பழுதடைந்து போன வயர் மீண்டும் அறுந்து அவர்மேல் விழுந்தது. என் முன்னால் எனது தாயார் துடிதுடித்து மரணமானார்

மாநகரசபை ஊழியர்கள் வந்துதான் எனது தாயாரின் சடலத்தை மீட்டு எடுத்துத் தந்தனர்.

முதன் முறை அறுந்து விழுந்தபோது பழைய வயரை மாற்றி புதிய வயரைப் போட்டிருந்தால் எனது தாயார் இறந்து இருக்கமாட்டார்.

எனது தாயாரின் இறப்புக்கு யாழ் மாநகர சபையே முழுப்பொறுப்பு எனவே என் தாயாரின் மரணத்துக்கு யாழ் மாநகரசபை நஷ்டஈடு தர வேண்டும்.

இது போன்ற மரணங்கள் மீண்டும் ஏற்படாதவாறு யாழ் மாநகரசபை பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி திருமதி இன்பராணி, ஆணையாளரைக் கேட்டிருக்கிறார். (இ-எ)

# அனைவரையும் கவர்ந்த 'நவீல்டீ' நத்தார் இசை

யாழ்ப்பாணம், நவ 25

கைதடி நவீல்ட் செவிப் புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இசை ஆராதனையும் கலை நிகழ்ச்சிகளும் பாசாலை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

பாடசாலை அதிபர் திரு. ஜே. எஸ. டேவிட் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மாணவர்களின் பெற்றோர், பொதுநல விரும்பிகள், பொதுமக்கள் பெருந்தொகையாக சமூகமளித்திருந்தனர்.

விழிப்புலன், செவிப்புலன் இழந்த மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

விழிப்புலன் இழந்த மாணவர்களின் இசை நிகழ்ச்சியும்; அவ்விசைக் கேற்றபடி செவிப்புலன்

(4 ம் பக்கம் பார்க்க)

# ஆரையம்பதியில் கைதானோர் விடுதலை

மட்டக்களப்பு, நவ 25

ஆரையம்பதியில் ஆயுதப்படையினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட பொதுமக்களும் மாணவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர். கல்லடி முகாமில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு பிரசைகள் குழுவினரின் முறையீட்டைத் தொடர்ந்து 34 பொதுமக்கள் கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

தடுத்துவைக்கப்பட்ட 9 மாணவரும் அப்பாவிகள். டிசம்பரில் ஜி. சி. ஈ சாதாரண பரீட்சை எடுக்க வேண்டியவர்கள் என்று மாணவர் நலன் பேணும் அமைப்பின் செயலாளர் திரு. பி. யோசப் முறையிட்டார்.

அதைத் தொடர்ந்து 9 மாணவர்களும் சனிக்கிழமை விடுவிக்கப்பட்டனர். (இ - எ - 21)

# எமது சொந்த மக்களைக் கொல்வதால் நமக்கு என்ன பலன்?

## பிரதி அமைச்சர் கேட்கிறார்

கொழும்பு, நவ. 25

எமது சொந்த மக்களைக் கொல்வதனுல் நாம் அடையப்போகும் நன்மை என்ன?

இப்படிக் கேட்டார் பிரதிநீதி அமைச்சரும் செங்கடகல எம்.பியுமான திரு. ஷெல்டன் ரணராஜா.

செங்கடகலவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;

ஆயுதங்கள் வாங்க 600 கோடி ரூபாவை இந்த ஆண்டில் செலவு செய்தோம். அடுத்த ஆண்டில் 1,200 கோடி ரூபாவைச் செலவுசெய்ய உள்ளோம்.

எமது மக்களைக் கொல்ல இவ்வளவு பணத்தைச் செலவு செய்வதால் நாம் அடையப் போவது என்ன?

அரசாங்கம் வெளிநாட்டு எதிரிமீது யுத்தம் நடத்தவில்லை. எமது சொந்த மக்களுக்கு எதிராகவே யுத்தம் நடத்துகின்றது

இப்படி பிரதி அமைச்சர் சொன்னார். (இ-எ)

# எல்லோரும் பெண்கள் ஆண் ஒருவன்தான்

## என்று கத்தியும் சுட்டனர்

எங்கள் வீட்டில் எல்லோரும் பெண்கள் இவன் ஒருவனே எங்களுக்கு ஆண்பிள்ளை என்று கத்திய போதும் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் எனது அம்மாவின் கையில் காயம் எற்பட்டது.

வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற சிப்பாய்களின் தாக்குதல்களினால் காயமடைந்தவர்களில் ஒருவரான அகிலாண்டேஸ்வரி (40 வயது) என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்கப்பட்டுள்ளார்.

இவரின் மகள் மேற்கண்டவாறு 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மகள் தெரிவித்ததாவது:-

வெள்ளிக்கிழமை பகல் பத்துமணி இருக்கும். எமது வீட்டில் இருந்து நூறு யாருக்கு அப்பால் சிப்பாய்கள் வந்து கொண்டிருந்தனர்.

தம்பியிடம் அடையாளக் கார்ட் இருக்கவில்லை நான் உடனே எனது தம்பியை அழைத்து அவரின் படத்தை மட்டும் கொடுத்து பத்திரமாக இருக்கும்படி சொல்லிவிட்டு அப்பாவை கூப்பிடச் சென்றேன்.

தம்பி அம்மாவிடம் சென்றதைக் கண்ட சிப்பாய்கள் ''கொட்டியா'' ''கொட்டியா'' எனக் கத்திக் கொண்டு ஓடிவந்தனர்.

தம்பியும் பயத்தினால் ஓடிச் சென்று அம்மாவின் மடியில் விழுந்து படுத்தான்.

அப்போது சிப்பாய்கள் சுட்டனர். துப்பாக்கிக் குண்டு அம்மாவின் கைகளைத் துளைத்தது

பின்னர் நாமும் ஓடிச் சென்று தம்பியைக் கட்டிப் பிடித்து அழுதோம். அப்பொழுது எங்களைச் சுற்றி சிப்பாய்கள் நின்றனர்.

நாங்கள் எல்லோரும் பெண்கள். தம்பி ஒருவன் தான் எங்களுக்கு ஆண்மகன் அவனைச் சுட்டு விடாதீர்கள் எனக்கத்தினோம்.

பின்னர் சிப்பாய்கள் காயமடைந்த எனது அம்மாவுக்கு மருந்து கட்டி வான் ஒன்றின் மூலம் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு அம்மாவை அனுப்பி வைத்தனர்.

பின்பு அங்கிருந்து அம்மா யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

நாங்கள் தம்பியைக் கட்டிப் பிடித்து அழுததைக் கண்ட சிப்பாய்களில் ஒருவன் ''எங்களுக்கும் தம்பிமார் அம்மா, அப்பாமார் இருக்கின்றனர். கொட்டியா என்று நினைத்துத்தான் உங்கள் தம்பியை சுடப் போனோம் அது அம்மாவுக்கு பட்டு பட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள் என்றான்.

இப்படி அவர் கண்கலங்கியபடி எமது செய்தியாளரிடம் சொன்னார் (இ-10)


## டில்கா வார்ச் வேர்க்ஸ்

வாடிக்கையாளர்களுக்கு

## முக்கிய அறிவித்தல்

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு மேற்படி ஸ்தாபனத்தில் மேற்கொண்ட வேலைகளை இப்போது 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள வீனஸ் நிறுவனத்தில் செய்கிறோம். டில்கா வார்ச் வேர்க்ஸில் தமது பொருள்களை ஒப்படைத்தவர்களும் அவற்றை வீனஸில் பெற்றுக்கொள்ளலாம்.

தற்போது உள்ள சூழ்நிலையால் எமது மணிக்கூட்டு அனைத்து வேலைகளுக்கும் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.


# 'ரியூசன்' என்பது வெறும் மாயை பந்தயப் பாதையில் தென்படும் கானல் நீர் என்கிறார் அதிபர்

யாழ்ப்பாணம், நவ 25

மாணவர்கள் இன்று பாடசாலையில் அறியாததை ரியூசனில் அறியலாம் என்று எண்ணுவது கானல் நீர் போன்ற மாயையே.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் அதிபரின் அறிக்கையை வாசிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; பெற்றோர்கள் மூன்தள்ள, மாணவர்கள் பந்தயத்தில் பங்கு பற்றுகிறார்கள்.

பந்தயப் பாதையில் தென்படும் கானல் நீர் ரியூசன்.

மாணவரின் உள்ளத்தில் அமைதியில்லை; உடலுக்கோ ஓய்வில்லை; சுயமாக சிந்திக்க வாய்ப்பில்லை; சுய ஆக்கத்திற்கு வாய்ப்பில்லை.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் போதுமான எண்ணிக்கை இருந்தாலே; கல்வித்தாகத்தால் தவிக்கும் மாணவனுக்குப் பாடசாலை எனும் தடாகத்தில் போதிய நீர் கிடைக்கும் என்றார்.

விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி சபா ஜெயராசா பேசுகையில்; கல்வியறிவில் பின்தங்கியுள்ள மாணவர்களைப் பற்றி சிந்திக்க நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாணவன் கௌரவிக்கப்படும் போது; பின்தங்கியுள்ள மாணவனும் கௌரவிக்கப்பட வேண்டும்.

அவனும் தனது விடா முயற்சி மூலம் அதிக புள்ளிகளை பெறச் செய்து; பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட வேண்டும்.

மாணவரின் தனி முயற்சிகளுக்கு பரிசளிப்பதை குறைத்து; கூட்டு முயற்சிகளுக்கு பரிசளித்து சமூக அபிவிருத்தியை நாம் கட்டியெழுப்ப வேண்டும்; என்றார்.

பரிசளிப்பு வைபவத்தில் திருமதி பானுமதி ஜெயராசா மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார் (இ-5)

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

## நல்லின காய்கறி விதைகள்

யாழ்ப்பாணம், நவ .25

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான சிறந்த இனக் காய்கறிவிதைகள் விவசாயத்திணைக்களத்தினால் தருவிக்கப்பட்டு சுலபமாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இருப்பில் உள்ள விதைகள் வருமாறு:-

1. எம் ஐ-1 இன மிளகாய் விதைகள், 2. நிலக்கடலை, 3 பீட்றூட், 4. கரட்.

எம். ஐ-3 இன எள் கூடிய விரைவில் தருவிக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது.

வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அதில் ஆர்வம் காட்டுபவர்களுக்கும் காய்கறி விதைகள் கிடைக்கச் செய்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி விதைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள், திருநெல்வேலியில் உள்ள யாழ் மாவட்ட விவசாய விரிவாக்க உதவிப்பணிப்பாளருடனோ யாழ்ப்பாண மாவட்ட கமநலச் சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளருடனோ அல்லது அயலில் உள்ள கமநல சேவை நிலையத்துடனோ தொடர்பு கொண்டு அவ்விதைகளைப் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ)

### பாஷையூரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரனை விடுதலை செய்யக்கோரி பாஷையூரில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. (இ-1)

### சாவகச்சேரியில் 'ஆகுதி' நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 25

திரு.என் சோமகாந்தனின் 'ஆகுதி' நூல் வெளியீட்டு விழா சாவகச்சேரி நகர மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூல் அறிமுக உரையை நிகழ்த்துவார்.

சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திரு. த. நவரத்தின ராசா தலைமைவகிப்பார். (இ-எ)

### வீர வணக்கம்

யாழ்ப்பாணம், நவ. 25

முள்ளியவளையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆயுதப் படையினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி தயா வீர மரணம் அடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தயாவுக்கு வீரவணக்கம் செலுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (உ-எ)


## பிரயாண ஒழுங்குகள்

GLORIA TRAVELS

கனடா ● சுவிட்சர்லாந்து

● ஜேர்மனி ● பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

## முக்கிய அறிவித்தல்

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் நிலைவரம் காரணமாக பொதுமக்கள் நன்மை கருதி எமது ஸ்தாபனத்தின் விற்பனை நிலயம் ஒன்றைக் கீழ்க்காணும் விலாசத்தில் திறந்திருக்கிறோம்.

எஸ் சுப்பிரமணியம் & கொம்பனி

34, ஆடியபாதம் வீதி,

நல்லூர் — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23068

(நல்லூர், கல்வியங்காடு மார்க்கற் சந்தியிலிருந்து நாயன்யார்கட்டுப் பக்கமாக 100 யார் தூரத்தில்)

எமது சகலவிதமான தயாரிப்பு மற்றும் விற்பனைப் பொருட்களையும் அதே விலையில் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இறைவன் என் இதயத்தில் இருக்கிறார் என்பதிலும் பார்க்க நான் இறைவனின் இதயத்தில் இருக்கிறேன் என்று சொல்லிப் பாருங்கள்.

— காலில்கிப்ரான்


# உதயன்

உண்மை - நிர்ச்சாலை - நடுநிலைமை

இல 15. 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

25-11-1986 த பெ இல. 23


## கொலைகளால் பயன் என்ன?

ஸ்ரீலங்காவை ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியில் அங்கம் வகிப்பவர்களில் அர்த்தத்துடன் பேசுவோர் ஒரு சிலரே. நியாய சிந்தையுடன், நிதானத்துடன் கருத்து வெளியிடுவோரும் மிகச் சிலரே. அந்த ஒரு சிலரில் பிரதி நீதி அமைச்சரும், செங்கடகல எம். பியுமான திரு ஷெல்டன் ரணராஜவும் ஒருவர்,

குறிப்பாக இனப்பிரச்சினை சம்பந்தமாக அவர் எப்போதும் நிதானத்துடனும், நடுநிலையுடனும் கருத்து வெளியிட்டு வருபவர் தமக்குச் சரியெனப்படுவதை அச்சமின்றி எடுத்துக் கூறும் துணிவு உடையவர்.

தமது தொகுதியில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கருத்தாழம் மிக்க பல விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார். அரச மேல்மட்டத்தில் உள்ளவர்களின் மரத்துப்போன மனச்சாட்சியைக் குத்திக் காட்டும் விதத்தில் நியாய பூர்வமான கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

நடப்பு வருடத்தில் இராணுவச் செலவுகளுக்கு 600 கோடி ரூபா செலவு செய்து விட்டோம். அடுத்த வருடம் 1,200 கோடி ரூபாவைச் செலவிடப் போகிறோம். இத்தனை கோடி பணத்தைச் செலவு செய்து எமது சொந்த மக்களைக் கொல்வதன் மூலம் நாம் எதனை அடையப் போகிறோம்?—

அடுத்த வருடத்தில் இந்த யுத்தம் நிறுத்தப்படாவிட்டால் இந்த நாடே அழிந்து போகும். எல்லா மக்களுமே அழிந்து போவார்கள்—

இனப்பிரச்சினையைத் தீர்த்து, மனிதக் கொலைகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் இப்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் பயனற்று விடும்.

அரசாங்கம் வெளிநாட்டு எதிரி எவருக்கும் எதிராகப் போராடவில்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் எமது சொந்த மக்களே— இவ்வாறு திரு. ரணராஜா தெரிவித்திருக்கிறார்.

அவரது கருத்துக்கள் வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல்லு எழுத்துக்கு எழுத்து அர்த்தம் உள்ளவை. இரத்தினம் போன்றவை. நியாயசிந்தை உள்ள எவரும் ஏற்கக் கூடியவை. ஒரு பக்கம் சாராதவை. அவரது மனப்பக்குவத்தை வெளிப்படுத்துபவை

இந்த மனப்பக்குவம் அவரது ஏனைய (அரசாங்கச்) சகாக்களுக்கு இன்னும் வரவில்லை. குறிப்பாகத் தலைமை ஆசனத்தில் உள்ளவருக்கும், பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளவருக்கும் திரு ரணராஜாவின் மனப்பக்குவம் தேவை.

இனப்பிரச்சினையை நியாயமான விதத்தில் தீர்த்து வைக்க அவர்கள் விரும்பவில்லை. தமக்குச் சார்பான தீர்வைக் கொண்டுவரவே விரும்புகிறார்கள்.

உயிரிழப்பு தமிழர்கள் பக்கத்தில் மட்டுமில்லை. சிங்களவர் பக்கத்திலும் உண்டு. அரிது அரிது மானிடராதல் என்று சமயப் பெரியோர்கள் சொன்னார்கள். இரண்டு தரப்பிலும் நாளாந்தம் உயிரிழப்புகள் நடக்கின்றன.

ஆனால் கூட்டங்களில் மாநாடுகளில் அஹிம்சை, மனுநீதி பேசிக்கொண்டே யுத்தம் நடத்தப்படுகிறது. யுத்தத்தில் தமது பக்கமே வெல்லப்போவதாகவும் அரசாங்கம் பிதற்றிக்கொள்கிறது.

தனது அநியாய அக்கிரமங்களை மூடி மறைக்கும் தந்திரமாக அரசு பொய்ப்பிரசாரங்களையும் செய்துவருகிறது. அதற்கு ஏற்றாற்போல தென்னிலங்கையில் பொதுசனத் தொடர்பு சாதனங்களைத் தனது பிடிக்குள் போட்டு வைத்திருக்கிறது.

இருபக்கத்திலும் இருப்பவர்கள் மனிதர்கள். வெளிநாடு ஒன்றோடு யுத்தம் நடத்தவில்லை. யுத்தம் தொடர்ந்தால் நாடே அழியும். எல்லோருமே அழிவார்கள். இவை யாவும் அரசாங்கத்துக்குத் தெரியாமல் இருக்க முடியாது. எனினும் அது விருதுக்கு வேட்டையாடுகிறது.

நியாயத்தைத் திறந்த கண்ணோடு பார்க்கும் திரு. ரணராஜா போன்ற பலர் அரசின் உயர் மட்டத்துக்கு புத்தி புகட்டவேண்டும். அங்கு இருப்போரின் மனம் பக்குவம் அடையும் விதத்தில் விஷயங்களை விளங்க வைக்கவேண்டும்.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அல்லவா?

இந்தப் பணியைச் செய்வதற்கு இன்னும் சில ரணராஜாக்களாவது தென்னிலங்கையில் உருவாக வேண்டும். காலம் அவர்களை உருவாக்குமா?

## முஸ்லிம் காங்கிரஸின் மாநாடு

அம்பாறை, நவ. 25

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆறுவது வருடாந்த மாநாடு 25 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எச். எம். எச். அஷ்ரப் மாநாட்டிற்கு தலைமை வகிப்பார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசியல் கட்சியாக பிரகடனப் படுத்தும் முக்கிய தீர்மானம் நிறைவேற்றப் படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அம்பாறை மட்டக்களப்பு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து 500க்கும் அதிகமான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

# மொஸாம்பிக்கில் 52 வெளிநாட்டவர் பணயக் கைதிகள்

## கிளர்ச்சியாளர் அறிவிப்பு

மபிட்டு நவ.24

மொஸாம்பிக் கிளர்ச்சியாளர்கள் 52 வெளிநாட்டவர்களை பணயக் கைதிகளாகச் சிறைபிடித்துள்ளனர்.

தென் ஆபிரிக்காவின் வெள்ளை இன சிறுபான்மை அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுள்ள மொஸாம்பிக் கிளர்ச்சியாளர்களே இதனைச் செய்துள்ளனர்

மொஸாம்பிக் தேசிய விடுதலைப்படை என்று கிளர்ச்சியாளர்கள் தம்மை அழைத்துக் கொள்கின்றனர்.

இவர்களில் பிரிட்டிஷ் பிரசைகளும் அடங்குவர்.

பிரிட்டிஷ் அரசு மொஸாம்பிக்குக்குத் தொடர்ந்தும் இராணுவ உதவிகளை வழங்குவதால் தான் பணயக்கைதிகளுள் பிரிட்டிஷாரும் அடங்குவர் என விடுதலைப்படை தெரிவித்தது.

பணயக்கைதிகள் பலர் போத்துக்கேயர்கள். அத்துடன் மே. ஜெர்மனி, பிரான்ஸ் பிரசைகளும் அடங்குவார்கள்.

இவர்கள் அனைவரும் தத்தமது நாடுகளுக்கு விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மைநிலையை உணர்த்திய பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் விடுவிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஒ)

### ரஷ்யருக்கு கனடா தஞ்சம்

ஒட்டாவா, நவ. 24

ஆப்கானிஸ்தானில் கைவிடப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ரஷ்யா ராணுவத்தைச் சேர்ந்த ஐந்து அதிகாரிகள் ரகஸியமாக கனடாவிற்கு அனுப்பப்பட்டனர். (ஒ)

## வெளி உலகில்

## சர்வதேச 'பேய்கள்' மாநாடு!

இந்தியானு போலிஸ், நவ. 24

அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில் அமெரிக்காவின் இந்தியானு மாநிலத்தில் சர்வதேச பேய்கள் பற்றிய மாநாடு நடைபெறும்.

இந்தியானு மாநிலத்தில் பேய் ஆராய்ச்சியாளர் மன்றம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இதில் பெரும்பாலான உலகநாடுகளில் இருந்து விஞ்ஞானிகள் கல்விமான்கள் மற்றும் பேய் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொள்வார்கள்.

இச்சங்கத்தின் தலைவர் ஜெப் கொக்கின்ஸ் ஏழுநாள் மாநாட்டின் போது பேய் பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகள் வாசிக்கப்படுவதுடன் அவை உலகில் இருக்கின்றன என நிரூபிக்கப் படக்கூடிய சாட்சியங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் மூலமும், வீடியோ படங்களின் மூலமும் நிரூபிக்கப்படும் என தெரிவித்தார்.

மாநாட்டு நிகழ்ச்சிகள் ரகஸியமாக மேற்கொள்ளப்படும் என்றும், ஒவ்வொரு தினமும் மாலை ஏழு உறுப்பினர்கள் கொண்ட வெகுஜன தொடர்புக்குழு செய்தியாளர்களுக்கு அன்றைய நடவடிக்கைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆபிரிக்க நாடுகளிலும் ஆசியாவிலும் ஒருசில ஐரோப்பிய நாடுகளிலும் தான் பேய்பற்றிய நம்பிக்கை அதிகமாக இருப்பதாகவும் அந்த நாடுகளில் இருந்தே பெரும்பாலான பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த உலக மாநாடு முடிந்த பின்னர் தாங்கள் மாதாந்தம் ஒரு சஞ்சிகை வெளியிடுவதற்கும் தீர்மானித்துள்ளதாக கொப்கின்ஸ் அறிவித்தார். (ஒ)

## ஜோர்ச் சூல்ட்ஸை பதவி நீக்க ஆலோசனை

வாஷிங்டன், நவ 24

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்சை பதவி நீக்கம் செய்துவிட்டு அப் பதவிக்கு பாதுகாப்பு அமைச்சர் வைன்பேகரை நியமிக்க வேண்டும்

இவ்வாறான ஆலோசனை ஜனாதிபதி றேகனுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் பலரும் ஜனாதிபதியின் மனைவி நான்ஸியும் இந்த ஆலோசனையைத் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

### நிக்கராகுவாவில் அன்னை திரேசா

மனாகுவா, நவ 24

அன்னை திரேசா யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ள நிக்கராகுவாவின் பல பகுதிகளைப் பார்வையிட்டார்.

மனாகுவாவில் நடைபெறும் ரோமன் கத்தோலிக்கமாநாட்டில் கலந்து கொள்வதற்காக அன்னை திரேசா நிக்கராகுவாவந்திருந்தார்.

இதற்கு முன்னதாக பனாமாவிற்குகுறுகியவிஜயத்தை அன்னை திரேசா மேற்கொண்டிருந்தார். (ஒ)

### கொர்பச்சேவ் இன்று இந்தியா விஜயம்

மாஸ்கோ, நவ. 25

இந்திய - ரஷ்ய நட்பு உலக அமைதிக்கு வழி வகுக்கும் முக்கியமான நடவடிக்கையாகும்.

இவ்வாறு இன்று செவ்வாய்க்கிழமை இந்திய விஜயஞ் செய்யவுள்ள ரஷ்ய அதிபர் மிகாயில் கொர்பச்சேவ் மாஸ்கோவில் தெரிவித்தார்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஒப்பந்தமான இந்திய - ரஷ்ய அமைதி மற்றும் நட்பு உடன்பாடுகள் என்றுமே பயன்தர வல்லன. இதனால் இரு நாடுகளுமே மிகுந்த பயன் பெற்றுள்ளன.

இந்தியாவில் நான்கு நாட்கள் தங்கவுள்ள கொர்பச்சேவுடன் ரஷ்ய உயர் அதிகாரிகள் குழுவொன்றும் இந்தியா பயணமாகும். (ஒ)

## சூடானில் கைது

கார்ட்டூம், நவ. 24

சூடானில் பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி நிமேரியின் நெருங்கிய உதவியாளர் ஒருவர் எகிப்திலிருந்து சூடான் திரும்பியபோது கைது செய்யப்பட்டார்.

மேஜர் அப்துல் காசிம் எனும் இவர் 1969ல் நிமேரி ராணுவ புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியபோது பெரிதும் உதவி புரிந்தார் எனச் சொல்லப்படுகின்றது.

நிமேரியின் பதவிக் காலத்தில் ராணுவ உயர் அதிகாரியாக காசிம் பணிபுரிந்தார்.

1969ல் ராணுவப் புரட்சி மேற்கொண்டதற்காக இவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும். (ஒ)

## செய்திச் சாரம்

### ஈராக் தாக்குதல்

தெஹ்ரான், நவ. 24

இரண்டு ஈரானிய நகரங்கள் மீது ஈராக் நடத்திய விமானத் தாக்குதல்களில் 112 பேர் பலியாகினர் பலர் காயமடைந்தனர்.

ஈரானின் மேற்குப் பகுதியில் இது நடந்தது. (ஒ)

### மீண்டும் மோதல்

பெய்ரூட், நவ. 24

தெற்கு லெபனனில் அகதிகள் முகாம் ஒன்றில் மீண்டும் சண்டைகள் ஏற்பட்டுள்ளன.

பாலஸ்தீன காமாண்டோக்களுக்கும் ஷியா முஸ்லிம் அமல் மக்கள் படைக்கும் இடையே இச்சண்டை ஆரம்பமாகியது. (ஒ)

### ஆப்கான் ஜனாதிபதி

காபூல், நவ. 24

ஆப்கானிஸ்தான் தற்காலிக ஜனாதிபதியாக முகபட் ஜம்கானி பதவி ஏற்றுள்ளார்.

சென்ற வியாழக்கிழமை பாப்ராக் காமால் ஜனாதிபதி பதவியை ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (ஒ)

### அமைச்சரவை மீண்டும் மாறும்

தமிழக அமைச்சரவை மீண்டும் மாற்றம் செய்யப்படும்.

இதனை முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் சூசகமாக அறிவித்தார். மேலதிக விவரம் எதையும் அவர் தெரிவிக்கவில்லை. (ஒ)

### பனிப்புயல்

ஜம்மு - காஷ்மீரில் பனிப்புயல் நேற்றும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது.

பனியில் புதையுண்ட 20 வாகனங்களும் 41 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. (ஒ)

அடுத்த ஆண்டு நியமனமாகும்

# புதிய ஆசிரியர்களில் 1,000 பேர் தமிழர்

கொழும்பு, நவ. 25

அடுத்த ஆண்டு கல்வி அமைச்சினால் நியமிக்கப் படவுள்ள 4,000 ஆசிரியர்களின் ஆயிரம் பேர் தமிழ் ஆசிரியர்களாக இருப்பர் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது,

2,000 பேர் ஆங்கில ஆசிரியர்களாகவும் 1,000 பேர் சிங்கள ஆசிரியர்களாகவும் இருப்பர் என்று கல்வி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர் நியமனத்துக்காக கல்வி அமைச்சு விரைவில் விண்ணப்பங்களைக் கோர இருப்பதாகவும் நேர்முகப் பரீட்சைகள் டிசம்பரில் இடம்பெறும் என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சையில் சித்தி எய்தியிருந்தால் போதுமானது.

சிங்கள, தமிழ் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பவர்கள் ஜி. சி. ஈ. உயர்தரம் பரீட்சையில் சித்தி எய்தி இருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

புதிய ஆசிரியர்கள் திரட்டப்படுவதைத் தொடர்ந்து, கஷ்டப் பிரதேசத்தில் கடமை ஆற்றும் ஆசிரியர்களுக்கு அவர்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பிக்க முடியும் என்று அமைச்சுப் பேச்சாளர் சொன்னார்.

அடுத்த ஆண்டு முதல் தவணையின் போது கடமையை ஏற்கக் கூடிய விதத்தில் குறுகிய காலப் பயிற்சி புதிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். (இ-எ)

### தொகுப்புகளை வெளியிட 'ஆய்வு' திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 25

சமகாலப் பிரச்சினைகளைப்பற்றி தமிழில்வெளிவந்த சிறுகதை, நாவல், குறுநாவல் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிட ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்து உள்ளது.

படைப்பாளிகள் ஆக்கங்களின் பிரதிகளை டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ-எ)

# கிழக்கை பிரிப்பதற்கு தமிழ், முஸ்லிம் அரசாங்க

## பிரமுகர்கள் விரும்பவில்லையாம்

கொழும்பு, நவ. 25

கிழக்கில் தமிழருக்கு ஒரு மாகாணசபை, முஸ்லிம்களுக்கு ஒரு மாகாண சபை, என்று பிரிக்கப் படுவதை கிழக்கில் உள்ள அரசாங்க தமிழ், முஸ்லிம் முக்கியஸ்தர்களே விரும்பவில்லை என்று தெரியவந்துள்ளது.

இந்த விருப்பமின்மையை விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்து அவர்கள் சொல்ல இருக்கின்றார்கள் என்று அறிய வருகிறது. பல்லாண்டு காலமாக தமிழரும் முஸ்லிம்களும் கிழக்கில் சகோதரர்களாக வாழ்ந்து வருகின்றனர். அப்படி இருக்கும் போது தனித்தனி மாகாணங்களில் பிரிந்து வாழ்வதை நாம் விரும்பவில்லை—

இப்படி கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் அரச முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனராம்.

கிழக்கில் சிங்களவருக்கு ஒரு மாகாண சபை என்ற நிலை வந்ததைத் தொடர்ந்தே இப்புதிய மனமாற்றம் கிழக்கிலங்கை அரச முக்கியஸ்தர் மட்டத்தில் ஏற்பட்டுள்ளதாம். (அ-எ)

## இந்தியப் போக்கின் பின்னணி என்ன?

### தெரியாமல் குழம்புகிறார் அனுரா

கொழும்பு, நவ. 25

இந்தியாவின் நடவடிக்கைகளின் பின்னணியில் உள்ள மர்மம் புரிவதாக இல்லை.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுராபண்டாரநாயக்கா கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

தமிழ்த் தீவிரவாதிகளைப் பிடிக்கிறார்கள். அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றுகிறார்கள்.

பின்னர் தீவிரவாதத் தலைவர் பிரபாகரனை விமானத்தில் பெங்களூர் கொண்டு போகிறார்கள். பின்னர் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்கிறார்கள்.

இப்படி இந்திய நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இதில் அடங்கியுள்ள மர்மம் என்ன? ஒன்றுமே புரிவதாக இல்லை.

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். (உ-எ)



### பொய்யாமொழி

குறள்:

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை வேண்டும் பிறன்கண் செயல்.

பொருள்:

[illegible] வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற் [illegible] டும்.

## வாசகர் நெஞ்சம்

## உபதபால் நிலைய பெண் ஊழியர் விளக்கம்

21-11-1986 வெள்ளிக்கிழமை உதயனில் வெளிவந்த உபதபால் நிலையங்கள் சேவை மனப்பான்மையுடன் இயங்க வேண்டும் என்ற தலைப்பின் கீழ் வந்த செய்திக்கு விளக்கமான பதில் அளிக்க விரும்புகிறேன்.

யாழ். பெரிய தபால் கந்தோர் பழைய இடத்தில் வைத்துத்தான் உபதபால் அலுவலகங்களுக்கான கணக்குப் பார்த்து முத்திரை அனுப்பும் வேலைகள் நடைபெறுகின்றன. இரண்டாம் குறுக்குத் தெரிவில் உள்ள கிளையில் தபால்கள் கட்டும் அனுப்பும் வேலைகள் மட்டுமே நடைபெறுகின்றன.

சூழ்நிலைகள் சுமூகமாக இருக்கும் போதே பெரிய தபால் கந்தோர் பழைய இடத்திற்கு உத்தியோகத்தர்கள் செல்லக்கூடியதாக இருக்கும், அப்போதுதான் உபதபாலகங்களுக்கு கணக்குகளைப் பார்த்து முத்திரைகளை அனுப்பி வைக்க முடியும். அதுவும் கொள்ளை போன்ற அசம்பாவிதங்களால் குறிப்பிட்ட அளவு குறைந்த தொகை முத்திரைகளே உபதபாலகங்களுக்கு தற்போது அனுப்பி வைக்கப்படுகிறன.

அத்துடன் ஒவ்வொரு கொழும்புத் தபாலில் எவ்வளவு முத்திரைகள் கூடுதலாக வருகின்றனவோ அவையே பெரிய தபாலகத்தின் கீழ் இயங்கும் 20 உபதாபாலகங்களுக்கும் பிரித்து வழங்கப்படுகின்றன.

கொழும்புத் தபாலில் முத்திரை வராவிடில் எமக்கும் வழங்கப்படமாட்டாது. முத்திரைகள் எவ்வளவுக்கு விற்கிறோமோ அதன்படி புள்ளி அடிப்படையிலேயே எமக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

இதை புரிந்து கொள்ளாத பொதுமக்கள் நாம் வேண்டுமென்று தமக்கு மறுத்துரைப்பதாக நினைக்கிறார்கள் சேவை மனப்பான்மையுடன் மகிழ்ச்சியுடன் கடமையாற்ற நாமும் ஆவலாக இருக்கிறோம். ஆனால் எமது பிரச்சினைகளையும் மக்கள் உணர வேண்டும்.

சில்லறைக்கு இன்று எந்த இடத்திலும் தட்டுப்பாடுதான். மக்கள் முத்திரைக்காகத் தரும் சில்லறையையே நாங்கள் உபயோகிக்கின்றோம். 50 ரூபா, 100 ரூபா தாள்களை வைத்துக் கொண்டு ஒரு ரூபா முத்திரைக்கும் 75 சத முத்திரைக்கும் எம்முடன் வாதாடுபவர்கள் பலர்.

மற்றும் காசுக் கட்டளைகளை பொறுத்த மட்டிலும் குறிப்பிட்ட தொகை இருந்தால் மட்டுமே காசுக்கட்டளையை மாற்றிக் கொடுக்க வேண்டும்.

நாம் எவ்வளவு தெளிவாக விளக்கிக் கூறியும் வாதாடுபவர்களுடன் நாம் இயன்றளவு பொறுமையுடன் தான் நடக்கிறோம் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்களாக.

உபதபால் கந்தோர் பெண்ஊழியர்

யாழ்ப்பாணம்.

## அடையாளம் காணப்பட்டார்

வெள்ளியன்று மாலை யாழ் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக மரணமடைந்த மற்றும் ஒருவர் சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டார்.

நல்லூரைச் சேர்ந்த தம்பிராசா சாம்பசிவம் (50 வயது) என்பவரே அவர்.

வெள்ளியன்று சம்பவத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விக்ன டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்
A/L கலை, வர்த்தக மீட்டல், வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன
**DAY CLASSES**
8-00 மணி
SAT. + SUN. 12.00 மணி

# உதயன்

25 - 11 - 1986 செவ்வாய்க்கிழமை

**விக்ன டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
I கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினர் ஒன்றிணைந்து நடத்தும் ஒரே நிறுவனம்.
II. பரீட்சைப் பெறுபேறுகள் குறைந்து இருந்தால் கவலைப் படாதீர்கள். எமது நிறுவனம் கைகொடுக்கும். கடந்த காலப் பரீட்சை முடிவுகள் இதற்குச் சான்று ஆகும்.

இருதரப்பும்

# ஏற்றுக் கொள்ளத்தக்க சுமுகத் தீர்வு வேண்டும்

## துணைவேந்தர் கோருகிறார்

யாழ்ப்பாணம், நவ. 25

ஏற்றுக்கொள்ளக் கூடிய சுமுகமான ஒரு தீர்வுக்கு மாணவர்களும் இயக்கங்களும் ஒன்றுபட்டு முன்வரவேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று நடத்தப் பட்ட பேரணியின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், விஜிதரன் கடத்தல் விவகாரம் பெரும் மர்மமாகவே உள்ளது

முன்பெல்லாம் எவராவது கடத்தப்பட்டால் அவர் இருக்கும் இடம் பற்றிய தகவல் உடனடியாகத் தெரிந்து விடும் ஆனால் இப்பொழுது நிலைமை அப்படி அல்ல என்றும் கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பிரமுகர் பேசுகையில் அராஜகம் முடியும்வரை மாணவரோடு நாமும் போராடுவோம்

மக்களுக்காக போராட வந்தவர்கள். இன்று விடுதலை ஸ்தாபனங்களை அழிக்கிறார்கள்.

தங்களை எதிர்த்துக் கதைப்பவர்களை பச்சை மட்டையால் தாக்கி 250 ரூபா தண்டம் வசூலிக்கிறார்கள்.

மக்கள் தமது பேச்சு, எழுத்து சுதந்திரத்திற்காக அராஜகத்துக்கு எதிராக போராட வேண்டும் என்றார்.

மாணவர் அவை பிரதிநிதி பேசுகையில் எமது போராட்டம் இயக்கங்களுக்கு எதிரானதல்ல, அராஜகத்துக்கு எதிரானது என்றார்.

(இ-5-10)

## வீட்டுக்கு முன் நின்றவர் மீது துப்பாக்கிச்சூடு

யாழ்ப்பாணம், நவ. 25

வீட்டுக்கு முன்னால் நின்ற நபர் மீது கோட்டையில் இருந்து சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அந்தோனி சிறில் (40 வயது) என்ற இந்த நபர் இதனால் காலில் காயமடைந்தார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 9 30 மணி அளவில் குருநகரில் இச்சம்பவம் நடந்தது

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார். (இ-10)

## கடத்தப்பட்ட லொறி கண்டுபிடிப்பு

கல்முனை, நவ.25

அக்கரைப்பற்றில் வைத்து கடந்த வாரம் இனம் தெரியாத வாலிபர்கள் கடத்திச் சென்ற லொறி ஒன்று மீட்கப் பட்டுள்ளது

அக்கரைப்பற்று பிரசைகள் குழுவும் சமாதானக் குழுவும் இந்த மீட்புப் பணிக்குப் பெரு முயற்சி மேற்கொண்டிருந்தன

கொழும்பிலிருந்து சைக்கிள் உதிரிப்பாகங்களை இந்த லொறி ஏற்றி வந்தபோது அக்கரைப்பற்று நகரத்தில் வைத்து லொறி கடத்தப்பட்டது.

இந்த உதிரிப்பாகங்களின் பெறுமதி சுமார் 5 லட்சம் ஆகும் (ஒ)

## இரு பேரணிகளும் சந்தித்த போது...

யாழ்ப்பாணம், நவ. 25

நேற்று யாழ் நகரில் நடைபெற்ற இரு ஆர்ப்பாட்டப் பேரணிகளும் கந்தர் மடத்தில் ஒன்றை ஒன்று சந்தித்தன.


விடுதலைப் புலிகளின் பேரணியும் பல்கலைக்கழக மாணவரின் பேரணியுமே ஒன்றையொன்று இடையில் சந்தித்தன. அப்போது அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

பலாலி வீதியில் இரு பேரணிகளும் எதிரும் புதிருமாக வந்தபோது பல்கலைக்கழக மாணவர்கள் தமது பேரணியை நிறுத்தி வைத்திருந்தனர்.

புலிகளின் பேரணி அம்மன் வீதியால் நல்லூரை நோக்கிச் சென்றபின். பல்கலைக்கழக மாணவரின் பேரணி புறப்பட்டது.

இந்த இரு ஆர்ப்பாட்டப் பேரணிகளாலும் யாழ் நகர போக்குவரத்து சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது.

இரு பேரணிகளும் ஒரே சமயம் நகருள் நுழைந்ததால் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது (இ-5)



புலிகளினால் நடத்தப்பட்ட பேரணியில் சென்ற மாணவியருள் ஒரு பகுதியினர் (உ)

ஆஸ்பத்திரி வீதியிலிருந்து

# யாழ் மின் நிலையத்தை இடம் மாற்றம் செய்க

## மாநகர ஆணையாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், நவ. 25

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மின்சார நிலையத்தை வேறுஇடத்துக்கு மாற்றும்படி யாழ் மாநகர ஆணையாளருக்கு, மின்சார நிலைய ஊழியர்கள் மகஜர் அனுப்பியிருக்கின்றனர்.

மின் பொறியியலாளர் ஊடாக இம் மகஜர் அனுப்பப்பட்டுள்ளது

கடந்த ஒருவார காலமாக இராணுவ முகாமில் இருந்து நடத்தப்படும் ஷெல் தாக்குதலினால் யாழ் ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம் ஆகிய இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் பிரதானமின்மாற்றிக்கு அருகில் ஷெல் விழுந்து வெடித்து உள்ளது

கடந்த வெள்ளிக்கிழமை மின்சார நிலைய வாசலில் ஒரு குண்டு விழுந்து தெய்வாதீனமாக வெடிக்கவில்லை.

இந்த நிலையில் தொடர்ந்தும் வேலைசெய்ய நாம் விரும்பவில்லை, எனவே மின்சார நிலயத்தை வேறு இடத்துக்கு மாறறுங்கள்—

இப்படி மகஜரில் ஊழியர்கள் கோரி உள்ளனர்.

# மரக்கறி வாங்க வந்த இளம்பெண் மீது சூடு!

யாழ்ப்பாணம், நவ. 25

வவுனியா நகரத்துக்கு மரக்கறி வாங்க வந்த இளம் பெண் ஒருவர் மீது மறைந்திருந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் இச்சம்பவம் நடந்தது

சம்பவம் பற்றிக் கூறப் படுவதாவது:-

சம்பவதினம் வவுனியா நகரத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ மினி முகாமில் இருந்து சிப்பாய்கள் வெளியேவந்து பதுங்கி இருந்தனர். பதுங்கியிருந்தசிப்பாய்களைக்கண்டு ஓடிய இளைஞன் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எனினும் துப்பாக்கிக் குண்டு இளம் பெண்ணான 20 வயதுடைய யேசுதாசன் சுமத்திராவின் நெஞ்சுப்பகுதியைத் தாக்கியது.

காயமடைந்த இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(இ-10)

# கோட்டையிலிருந்து வந்த வேட்டுகளுக்கு மின் ஊழியர் தப்பினர்

யாழ்ப்பாணம், நவ 25

மின்தடையைச் சீர் செய்ய பிரதான வீதிக்கு நேற்றுக் காலையிற் சென்ற மின்சார ஊழியர்கள் கோஷ்டி ஒன்று, யாழ் கோட்டையில் இருந்து வந்த துப்பாக்கி வேட்டுக்களில் இருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பியது.

யாழ் மாநகரசபை மின் பொறியியலாளர் திரு. வே, நவரத்தினராஜா, மின் அத்தியட்சகர் திரு செ ஞானசேகரம் பிள்ளை, மின் முகாரி திரு. பொ. பாலசிங்கம் ஆகியோர் தலைமையில் சென்ற மின்சார ஊழியர்களே உயிர்தப்பினர்.

வெள்ளிக்கிழமை நடந்த ஷெல் தாக்குதலில் யாழ் மத்திய கல்லூரிக்கு முன்னால் உள்ள பிரதான மின்கம்பி அறுந்ததினால் மத்திய கல்லூரியில் இருந்து பிரதான வீதி, 3 ஆம் குறுக்குத் தெரு வரையுள்ள சில பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடை ஏற்பட்டிருந்தது

இதனைச் சீர்செய்யவே மின் ஊழியர்கள் மத்தியகல்லூரியின் உட்புறமாகச் சென்று அறுந்த கம்பியை திருத்த ஆயத்தம் செய்து கொண்டு இருந்தனர்.

அப்போது தான் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து 6 வேட்டுக்கள் இவர்களை நோக்கித் தீர்க்கப்பட்டன.

எவரும் காயமின்றி மயிரிழையில் உயிர் தப்பினர்.

பாடசாலையிலும் பதற்றம் ஏற்பட்டது. திருத்த வேலைகளில் ஈடுபடாமல் மின் ஊழியர்கள் திரும்பவேண்டியதாயிற்று - (இ-எ)

# லலித்தின் யாழ் விஜயம்: கிட்டு கூறும் ஆரூடம்

யாழ்ப்பாணம், நவ, 25

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் வருகையைதொடர்ந்து யாழ் குடா நாட்டில் ஒரு பெரும் படையெடுப்பு நிகழ உள்ளது.

புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டு மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றைய பேரணி முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்பேசுகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை லலித் பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்து சிப்பாய்களை சந்தித்து; குடாநாட்டில் மீதான ஒரு பெரும்படை எடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்து சென்றார் என்றும் அவர் கூறினார். (இ-5)

# யாழ்நகரில்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது

மழையையும் பொருட்படுத்தாமல் பெரும் எண்ணிக்கையான பெண்கள் சிறுவர்கள் பேரணியில் கலந்து கொண்டனர்

மருதனமடத்திலிருந்து ஆரம்பமான இந்தப் பேரணி கே. கே. எஸ் வீதி, தட்டாதெருச்சந்தி, கந்தர் மடம், அம்மன் வீதி, வழியாக நல்லூர் கந்தசாமி கோவிலை அடைந்தது.

கோவில் முன்றலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டு உட்பட பல பிரமுகர்கள் உரையாற்றினர்,

பேரணியில் பொது ஸ்தாபனங்கள். சங்கங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், புலிகளின் மாணவர் இயக்கம் என்பன கலந்து கொண்டன.

பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டுகோஷிக்கப் பட்ட சுலோகங்களாவன:-

* "ஜே ஆரின் பித்தலாட்டம்; ராஜீவின் பொம்மலாட்டம்!"
* இந்திய அரசே! வேங்கைகளின்வேகத்தை தடுக்காதே!"
* "எம்பிமாரை பிடி தம்பிமாரைப் விடு!"
* "மக்கள் ரத்தம் சாம்7; அதனைத் திருப்பித்தா!
* "தலைவர் மேல் கை வையாதே! தமிழீழம் பொறுக்காது!"
* "மத்திய அரசே மதி மயங்காதே. மாநில அரச மண்டியிடாதே!"

## பல்கலைக் கழக மாணவர்பேரணி

விஜிதரனின் உருவப் படத்தை ஏந்தியவண்ணம் பல்கலைக் கழக மாணவரின் மாபெரும் பேரணி நடத்தப்பட்டது.

பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் காணமல் போனதைக் கண்டித்து. இப்பேரணி நடைபெற்றது.

மழையையும் பொருட் படுத்தாது பெரும் எண்ணிக்கையில் மாணவ மாணவிகள், பொதுமக்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணி நாச்சிமார் கோவில், கே. கே. எஸ் வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி வழியாக மீண்டும் பல்கலைக் கழகத்திற்குச்சென்று அங்கு முடிவுற்றது

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் துணை வேந்தர் வித்தியானந்தன் உட்பட பலர் உரையாற்றினர்.

பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டு கோஷிக்கப்பட்ட சுலோகங்களாவன;

* "விஜிதரனை விடுதலை செய்யுங்கள்!"
* எழுத்து, பேச்சு சுதந்திரம் தாருங்கள்!"
* விஜிதரன் எங்கே இயக்கங்களே! பதில் சொல்லுங்கள்!"
* "உயிர் இருக்கும் வரை அராஜகத்துக்கு எதிராகப் போராடுவோம்!"

(இ-10-5)

## அணைவரை--

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்த மாணவர்கள் வழங்கிய நாட்டியமும் பலரையும் கவர்ந்தன.

புலன் இழந்த மாணவர்களை இவ்விழா கலை நிகழ்ச்சிகளுக்கென ஆயத்தப்படுத்திய ஆசிரியர்கள் பெரும் பாராட்டுதலைகளைப் பெற்றுக் கொண்டனர். (இ 5)

**விண்ணப்பப் படிவம்**

கணித/விஞ்ஞான ஆசிரியர் பதவிக்கான படிவம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் 1/50சத முத்திரை அனுப்பவும், நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

## மரணத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் ஆறுதல் அடைந்தேன்.

"பெடியள் போராடுவார்கள்" என்றுவிட்டு மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது.

நாம் இந்திய அரசிடம் இழந்த ஆயுதங்களை மீளப்பெற மக்கள் போராட்டமே உகந்தது.

இந்திய அரசின் செயல் பாடுகளை நாம் முன் கூட்டியே தீர்க்கதரிசனமாய் உணர்ந்து சில நடவடிக்கைகளை எடுத்திருந்தோம்.

அப்போது அதை எதிர்த்த பல மக்கள் இன்று அதை உணர்ந்து எம்மை ஆதரிக்கின்றனர் என்றார்.

புலிகளின் மாணவர் அமைப்புப் பிரதிநிதி முரளி, தமிழர் கலாசார அவைப் பிரதிநிதிபுதுவை இரத்தினதுரை, சுதந்திரப் பறவைகள் மகளிர் பிரதிநிதி, உலகத்தமிழர் பண்பாட்டுக்கழக பிரதிநிதி பொன் பூலோகசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (இ-5)

## உண்ணாவிர--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் கிட்டு கூறினார்.

இதற்கான பகிரங்கமன்னிப்பை பத்திரிகைகள் வழியாக கேட்டுக்கொண்டால் மட்டுமே உண்ணாவிரதிகள் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை புலிகளுடன் நடத்துவர் என்று உண்ணாவிரதிகள் தெரிவித்தனர்

# போராளிகள் அஹிம்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய புலிகள் தலைவர் திரு. வே பிரபாகரன் இப்படிக் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை காலைமுதல் சாகும்வரை உண்ணாவிரதத்தை பிரபாகரன் ஆரம்பித்தது தெரிந்ததே

நேற்றுப் பிற்பகல் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தனடி பிரதிநிதியாக உணவு அமைச்சர் பண்ருட்டு இராமச்சந்திரனை உடனடியாக பிரபாகரனைச் சந்திக்க அனுப்பிவைத்தார்.

பிரபாகரன் மீதான பொலீஸ் கண்காணிப்பு உடன் நீக்கப்படும் என்றும்-

தகவல் தொடர்புச் சாதனங்கள் உடனடியாக திருப்பி அளிக்கப்படும் எனவும்-

பண்ருட்டி இராமச்சந்திரன் மூலம் முதலமைச்சர் எம். ஜி. ஆர். பிரபாகரனிடம் உறுதியளித்தார்

இதன் பின்னர் பிற்பகல் 3-30 மணியளவில் பிரபா மீதான பொலீஸ் கண்காணிப்பு அகற்றப் பட்டது. தகவல் தொலைத் தொடர்பு சாதனங்கள் திருப்பிக் கையளிக்கப்பட்டன.

சென்னைக்கு வெளியேயுள்ள இடங்களில்பொலீஸாரால் கைப்பற்றப் பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் உடனடியாக அவ்வப்பகுதி காவல்துறை அதிகாரிகளினால் அந்தந்த இடங்களில் திருப்பி ஒப்படைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதன் பின்னர் மாலை 4 மணியளவில் திராவிட கழக தலைவர் தளபதி வீரமணி முன்னிலையில் பிரபாகரன் பழரசம் அருந்தி உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

அதன் பின்னர் அங்கு வந்திருந்த பெருந்திரளான செய்தியாளர்கள் முன்னிலையில் அவர் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

அண்மைக்காலத்தில் தமிழக அரசும், தமிழக காவல்துறையும் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் எமக்கு மிகுந்த மனவேதனையையும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் எமக்கு உண்டு பண்ணின.

இதனையும் தமிழக அரசுக்கு சுட்டிக்காட்டு முகமாகவும், பறிக்கப் பட்ட பொருள்களை திருப்பிப் பெறும் முகமாகவும்-

புகலிடம் தந்த தமிழ் மக்களுக்கு இதனை எடுத்துக் காட்டவும் அஹிம்சை வழியில் நான் உண்ணாவிரதத்தை மேற்கொண்டேன்.

தமிழக அரசோ, காவல்துறையோ எனது கோரிக்கைகளுக்கு செவிமடுக்காவிட்டாலும் கூட எமது உடன் பிறவா சகோதரர்களாகிய தமிழ் நாட்டு மக்கள் எனக்கு எப்பொழுதும் துணைபுரிவார்கள்; என்னுடன் ஒத்திருப்பார்கள்; என்னை ஆதரிப்பார்கள் என்று முழுமையாக நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

இப்படி அவர் சொன்னார். (உ)

## தி மு க ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7 ஆர். சின்னசாமி.

பாண்டியனின் தீர்ப்பை எதிர்த்து தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இதனிடையில் சபாநாயகர் தீர்ப்பை ஆராய்வதற்காக தி.மு.கசெயற்குழு அவசரமாக எதிர் வரும் வியாழன் சேலம் நகரில் கூடுவதாக தி.மு.க.தலைவர் மு. கருணாநிதி அறிவித்தார்.

(இ-எ)

# இந்தியக் குழு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம் இருக்கலாம் என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி-இந்திய இணை அமைச்சர்கள் சந்திபபின் போது இடைநடுவில் 7 பேர் கொண்ட சட்ட நிபுணர் குழுவும் கலந்து கொண்டது

ஜனாதிபதியின் தம்பியாரான சட்டநிபுணர் டாக்டர் எச்.டபிள்யூ ஜெயவர்த்தன, சர்வ கட்சி மாநாட்டுச் செயலாளர் திரு. பீலிக்ஸ் அபயசிங்கா ஆகியோரும் சட்டநிபுணர் குழுவில் அங்கம் வகித்தனர்

இந்திய இணை அமைச்சர்கள் பா. சிதம்பரம் நட்வர்சிங் நேற்றுப் பிற்பகல் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தனர்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட உத்தரவின் மீதே இரண்டு அமைச்சர்களின்பயணம் அமைந்தது.

விசேட விமானம் ஒன்றில் கொழும்பு வந்து சேர்ந்த இணை அமைச்சர்களுடன் 3 இந்திய அரசு அதிகாரிகளும் வந்துள்ளனர்

உடனடியாக ஜனாதிபதியுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதே இவர்களின் திட்டமாக இருந்தது

ஜனாதிபதி இரத்தினபுரி சென்றிருந்ததால் சந்திப்பை உடனடியாக ஒழுங்கு செய்ய முடியவில்லை.

மாலை 5-30மணி அளவில் இரண்டு அமைச்சர்களும் அதிகாரிகள் சகிதம் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றனர்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் சாஹுல் ஹமீது, லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்கா ஆகியோர் பேச்சுக்களில் பங்குபற்றினர்.

இதனிடையில்புதுடில்லியில் இருந்துவரும் வழியில் கோயம்புத்தூர் விமான நிலயத்தில் இரண்டு அமைச்சர்களும் தரித்தனர்

ஈரோடு நகர் சென்று தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி.இராமச்சந்திரனைச் சந்தித்த பின்னர் மீண்டும் கோயம்புத்தூர் சென்று அங்கிருந்து கொழும்பு வந்தடைந்தனர்

ஜனாதிபதியுடனானபேச்சுக்களை முடித்துக் கொண்டு நேற்று இரவு இரண்டு அமைச்சர்களும் புதுடில்லி திரும்பினர்.

(உ-எ)

## மாணவி--:

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

திருந்தனர்.

உடல்நிலை சோர்வுற்ற போதிலும் உளஉறுதியுடன்உண்ணாவிரதிகள்திட மனதுடன் இருப்பதாக சக மாணவர்கள் தெரிவித்தனர். (உ-10)

**நீத்தார் பட்டியல்**

## சின்னத்தம்பி - சண்முகலிங்கம்

மீசாலை வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி சண்முகலிங்கம் (பொலிஸ் உத்தியோகஸ்தர், கொட்டாஞ்சேனை) காலமானார்.

இவர் முருகேசு சின்னத்தம்பி (வீரசிங்க வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர்) தம்பதிகளின் மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வி. சுந்தரலிங்கம், வி. இராமலிங்கம், வி. குமாரலிங்கம், திருமதி கனகலிங்கம், திருமதி சண்முகநாதன், திருமதி பத்மதேவா ஆகியோரின் சகோதரருமாவார்.

இறுதிக் கிரியைகள் மீசாலையில் நடைபெறும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 25 - 11 - 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power-House Road. JAFFNA

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60 N 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org